# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : உள்ளடக்கப்பட்ட பொது இடங்களை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## உள்ளடக்கப்பட்ட பொது இடங்கள்

உள்ளடக்கப்பட்ட பொது இடம் என்பதின் பொருள், பொதுமக்கள் செல்லக்கூடிய ஒரு கட்டிடம் அல்லது அமைப்பின் உட்புறமாகும். சில்லறைக் கடைகள், கட்டிடத்தினுள் உள்ள ஷாப்பிங் மால்கள், சிற்றுண்டிச்சாலைகள், மதுக் கடைகள், பொழுது போக்கு இடங்கள், கேஸினோக்கள், பிங்கோ மற்றும் பில்லியர்ட் கூடங்கள், டாக்ஸிகள் மற்றும் சொகுசு வண்டிகள்(லிமோஸீன்) போன்றவை இதில் அடங்கும். உள்ளூர் நகராட்சி துணைச் சட்டங்களின் கீழ் சில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்பட்டருந்த குறிப்பாக ஒதுக்கப்பட்ட புகைபிடிப்பு அறைகள் (DSRs), இப்பொழுது தடை செய்யப்பட்டுள்ளன.

## மற்ற பிற இடங்கள் : வெளிப்புற பேடியோக்கள் மற்றும் புகைபிடிப்பு புகலிடங்கள்

உள்ளடக்கப்பட்ட இடங்களில் பேடியோக்கள் இருந்தால், பேடியோவில் மேற்கூரை இருந்தாலோ, அல்லது அதன் ஒரு பகுதியை மட்டுமேகூட கூரை மறைத்தாலோ, புகை பிடித்தல் தடை செய்யப்படுகிறது. மழை அல்லது காற்றோட்டம் அல்லது இரண்டையுமே தடுக்கும் திறன் படைத்த நிழர்கூரை (ஆணிங்க்), தார்பாலின், கேன்வஸ் தாள் அல்லது மற்ற பிற நிரந்தர அல்லது தற்காலிக மறைப்புக்கள் ஆகியவை மேற்கூரை எனப்படுகின்றன. தனி ஒரு மேஜையை மரைக்கும் தனியாக நிறுத்தப்பட்டிருக்கும் மேற்கூரையாக கருதப்படாது. எனினும் குடைகளை மேற்கூரையாக வேலை புரியும் வகையில் உபயோகித்தால் சோதனையாளர் அதை மேற்கூரையாக கருதலாம், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

தன்னிடம் பணிபுரியும் புகை பிடிக்கும் ஊழியர்களுக்கு புகைப்பிடிப்பு புகலிடம் ஒன்றை பணியிடம் வெளியே எஜமானர் ஒருவர் அமைத்துக் கொடுக்கலாம். வெளிப்பக்கத்தில் புகை பிடிப்பு புகலிடம் ஒன்றை அமைத்துக் கொடுக்கும் எஜமானர், புகை பிடிப்பு புகலிடத்தில் இரண்டு சுவர்களும், ஒரு கூரையும் தவிர வேறு எதுவு மில்லாமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.

## உரிமையாளர் மற்றும் வேலை கொடுப்பவரின் கடமைகள்

உரிமையாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் கீழ்க்கண்டவற்றை உறுதி படுத்துவது அவசியமாகும் :

- புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என பொதுமக்கள் அறிந்துள்ளதை உறுதிபடுத்த வேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- தங்கள் ஸ்தாபனங்களில் பொதுமக்கள் புகை பிடிக்காமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.
- இவ்விதிகளை பின்பற்றாதவர்கள் ஸ்தாபனங்களில் இருந்து வெளியேற்றப்படுவதை உறுதி படுத்துங்கள்.
- *நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## பொதுமக்களின் கடமைகள்

எவரும் மதுபானக் கடை அல்லது உணவு விடுதியில் புகை பிடிக்கக் கூடாது.

## அமலாக்கம்

உள்ளூர் அரசு பிரிவுகள், சட்டத்தை அமல் படுத்தும் பொருட்டு, புகையிலை வியாபாரியின் சில்லறைக் கடைகள் தொடர்பாக சோதனைகளை நடத்துவதுடன் குற்றச் சாட்டுகளையும் விசாரிக்கும்.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கார்ப்பரேட் (கம்பனிகளுக்கென) அபராதம் பட்டியலிடப்படவில்லை. அதாவது அபராதத் தொகையை நிர்ணயிப்பது அமைதி பேணும் நடுவரின் (Justice of the peace) பொறுப்பாகும். தனி மனிதர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் $5,000 அபராதமாக விதிக்கப்படக்கூடும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario